*கவனிக்க.- 22.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1765 - 2012 ජූනි මස 29 වැනි සිකුරාදා - 2012.06.29

*1765 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1000 | | - |


***கவனிக்க.-*** *(i) ஜயரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

*(ii) விக்டர் அந்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, யூன் மாதம் 1 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவிந்திர,**
*அரசாங்க அழுத்தகர்*
*(கடமையை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்தப்பட்ட).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

**தென் மாகாண சபை**

தென் மாகாண தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரசபை

**பணிப்பாளர் நாயகம் பதவி**

(விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார கிராமிய கைத்தொழில் கிராம அபிவிருத்தி உல்லாசத்துறை, பொருளாதார ஊக்குவிப்பு, சமூக, நலனோம்பல், குழந்தை பராமரிப்பு மற்றும் குழந்தை பாதுகாப்புச் சேவை மகளிர் நடவடிக்கை வீட்டு அமைப்பு மற்றும் மனித வலு, தொழிற்துறை அமைச்சு).

தென் மாகாண தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகப் பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) பின்வரும் தகைமைகள் பெற்ற இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.)

1. **கல்வித் தகைமைகள் :**
இலங்கை நிருவாக சேவை மற்றும் இலங்கை செயற்றிட்ட சேவை உத்தியோகத்தராக குறைந்த அளவில் 5 வருட கால சேவை புரிந்திருத்தல் வேண்டும்.

இயற்கை விஞ்ஞான/பொருளாதா விஞ்ஞானம்/முகாமைத்துவம் (வியாபார/விற்பனை/மனித வலு/அரச/வணிக/புள்ளிவிபர ஆகிய விடயங்களில் ஏதாவது ஒரு விடயத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்றிருத்தல் (குறித்த பட்டம் உரிய தரத்தைக் கொண்டதாகவும் உரிய விடயம் தொடர்பாக பட்டப் பின் படிப்பையும் பெற்றிருத்தல் மற்றும்

(i) அரச, அரை அரச அல்லது தனியார் துறையில் நிறைவேற்று அலுவலர் பதவியில் 5 வருடங்கள் திருப்தியான சேவையை பூர்த்தி செய்துள்ளதோடு அதில் 2 வருடகாலம் சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர் பதவியில் சேவை புரிந்திருத்தல் வேண்டும்;

(ii) மேற்கூறப்பட்ட பாடங்கள் ஒன்றில் பட்டப்பின்படிப்புடன் 3 வருடங்கள் அரச, அரை அரச அல்லது தனியார் துறையில் நிறைவேற்று அலுவலர் பதவியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உரிய பல்கலைக்கழக சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.)

2. **விசேட தகைமைகள் :**
ஆங்கில மொழி தொடர்பாக சிறந்த தேர்ச்சி பெற்றிருத்தல், கணனி தகவல் பதிவுத் தொகுதியைத் தயாரித்தல் தொடர்பாக திறமை பெற்றிருத்தல். வருமான வரவுகளை உண்டுபண்ணும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திறமையையும் மற்றும் நவீன அலுவலக நிருவாக முறைகளைச் செயற்படுத்தும் திறமையை மேலதிக தகுதிகளாக பெற்றிருத்தல் வேண்டும்.

3. **வயது :**
விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு வயது 18 பூர்த்தியாக்கப்பட்ட மற்றும் வயது 45 க்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். அரச துறையில் சேவை புரிபவராயின் 55 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

4. **சம்பளம் :**
மாதாந்த சம்பளம் ரூபா 30,175 ஆகும். இதற்கு மேலதிகமாக பணிப்பாளர் குழுவின் தீர்மானத்தின்படி கொடுப்பனவுகள் உண்டு.

5. **ஆட்சேர்ப்பு :**
தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு உற்படுத்தி மேற்குறித்த பதவிக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவதுண்டு. சேவையின் திருப்திகரமான நிலையைப் பொருத்து ஒரு வருட காலத்தின் பின் சேவையில் நிறுத்திக் கொள்வது தொடர்பாக அதிகார சபையின் பணிப்பாளர் குழுவின் தீர்மானமாகும்.

6. **விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்தல்:**
தங்களால் தயாரிக்கப்பட்ட உயிரியல் தகவல் மற்றும் ஏனைய தகவல்கள் உட்பட்ட விண்ணப்பப்படிவத்தை பத்திரிகை அறிவித்தல் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் "பணிப்பாளர் நாயகம் பதவி தொடர்பான ஆட்சேர்ப்பு" என குறித்தல் வேண்டும் -

தவிசாளர்,
தென் மாகாண தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகார சபை,
"ஹில்டொப் மந்திரய",
காலி.

தலைவர்,
தென் மாகாண தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகார சபை.

ஹில்டொப் மந்திரய,
காலி.

6-911

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.